## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C.C–353–2023

| Addl Wt. LW.13 P.W.7 | | |
|---|---|---|
| Name: | சுப்பிரமணியன் | Caste: |
| Father's Name: | கிருஷ்ணன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026

(எதிரிகள் ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது வேட்டைக்காரனிருப்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் சாட்சிகள் போலிசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளித்திருப்பதால், நீதிமன்றத்தின் நேரம் கருதி, வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். வேட்டைக்காரனிருப்பு காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் பசுபதி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் அருண்குமார் ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு தெரியும். கடந்த 14.11.2018 அன்று வேட்டைக்காரனிருப்பு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அருண்குமார் நிலைய பொறுப்பிலிருந்தபோது, வெங்கட்ராமன் த/பெ. சுந்தரேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண்.136/2018 கொடுத்து, விசாரணைக்குப் பின்னர் நிலைய குற்ற எண் 97/2018 ச.பி. 294(பி), 342, 352, 324, 506(2) இ.த.ச–படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2– ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அன்றைய தினமே 12.00 மணிக்கு, உதவி ஆய்வாளர் பசுபதி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் 4– ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களையும், மகஜர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன் பிணையம் பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த வேதாரண்யம் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சுதர்சன் மற்றும் வினோத்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார். **விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.5 மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகளை விசாரணை செய்ததில், சக்கரை என்ற விக்னேஷ் மற்றும் சீனி என்கிற விஜய் ஆகிய இருவரும் வழிமறிக்கவோ, சம்பவ இடத்திலோ இல்லை என்று தெரிய வந்ததால், மேற்படி எதிரிகளை வழக்கிலிருந்து நீக்கறவு செய்து வழக்கின் சட்டப்பிரிவை 294(பி), 342, 352, 324, 506(2) இ.த.ச லிருந்து ச.பி. 294(பி), 352, 324, 506(2) இ.த.ச.வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ.7–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு, புலன் விசாரணையினை முடித்து 08.03.2019–ஆம் தேதி எதிரிகள் மீது ச.பி. 294(பி), 352, 324, 506(2) இ.த.ச ன் படி குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கின் நேரடி புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை. பொய்யான புகாரை பெற்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொய் வழக்கில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 29.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**